# இளைஞர் அணி - சமூக வலைதள கழக மாவட்ட துணை அமைப்பாளர்கள் நேர்காணல்! தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்!















சென்னை, ஜூன் 14-

தி.மு.கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைத்தளப் பயிற்சியளிக்கவும், சமூக வலைதளம் சார்ந்த அவர்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இப்பொறுப்புக்குத் தமிழ்நாடு முழுவதும் இருந்து 1400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இந்த நிலையில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விண்ணப்பித்தவர்கள் இதுவரை ஆற்றிய பணிகள் கொண்டு வந்திருந்த மினிட் புத்தகங்கள் மற்றும் அவர்களின் சமூக வலைதள பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மாநில துணைச் செயலாளர் முன்னிலையில் திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை நேற்று முன்தினம் நேர்காணல் செய்தார்.

### கரூர் மாவட்டக் கழகத்தில்

## புதிய உறுப்பினர்களை இணைக்க தீவிரமாகப் பணியாற்றுவோம்!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. உறுதி!

கரூர், ஜூன் 14-

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க வீடு வீடாக சென்று சாதனைத் திட்டத்தில் பயன் அடைந்ததை நினைவுப்படுத்தி, புதிய உறுப்பினர்களை இணைக்க வேண்டும் என கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையில் தெரிவித்தார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.



கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ. ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ் வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதி பாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் (முன்னாள் எம் எல்ஏ), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகலூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ்.காமராஜ், ஏ.அறிவழகன். ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

ஜூன் 1ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற மிகச்சிறப்பான பொதுக்குழுவில், மண், மொழி, மானம் காத்திட “ஓரணியில் தமிழ்நாடு” புதிய உறுப்பினர் சேர்க்கை தீர்மானத்தை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனடிப்படையில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 விழுக்காடு வாக்காளர்களை நாம் உறுப்பினர்களாக இணைக்க வேண்டும் எனவும், உறுப்பினர் சேர்க்கைக்குச் செல்லும் பூத் கமிட்டியினர் ஒவ்வொரு வீட்டிலும் 10 நிமிடங்களாவது செலவிட வேண்டும் எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது. உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபடும் நிர்வாகிகள் கழகத் தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் சாதனைகளையும், அவர்கள் வீட்டில் ஒருவராவது பயன் அடைந்துள்ளதையும் நினைவுபடுத்தி யும், முதல்வர் அவர்கள் முன்னெடுக்கும் உரிமை போராட்டங்களை பற்றியும் எடுத்து கூற வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

40 நாட்கள் நடைபெறும் “ஓரணியில் தமிழ்நாடு” என்கின்ற புதிய உறுப்பினர் சேர்க்கையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள், அந்தந்த பூத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள். மாநில, மாவட்ட தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள். மாநகர, பகுதி, ஒன்றிய, நகர பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்க படுகிறது. ஓரணியில் தமிழ்நாடு” என்கின்ற புதிய உறுப்பினர் சேர்க்கை பணியை முழுமையாக முடிக்கப்பட்டு வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும், கழகம் வெற்றி பெற்று வெற்றிக்கனியை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களிலும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களிலும், சமர்பிப்போம் என இக்கூட்டத்தின் வாயிலாக உறுதியேற்போம் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




## தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

தூத்துக்குடி வடக்கு மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | தூத்துக்குடி வடக்கு | கலைஞர் அரங்கம், எட்டையாபுரம் சாலை, தூத்துக்குடி. |
| | மாலை 4.00 மணி | திண்டுக்கல் மேற்கு | அபூர்வா ஹால், ஒட்டன்சத்திரம். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 10-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி